**தேதி :** 03.02.2026 **SC.No. :** 495/2023 PW :5 மாரித்தங்கம்

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் சம்பவத்தன்று வெளியூரில் வேலை பார்த்தேன் என்றால் இல்லை. சாட்சி மாரிச்செல்வம் என்னுடைய நண்பர். 15 வருடங்களாக அவரை எனக்கு தெரியும். மாரிச்செல்வத்தின் சகோதரி பெயர் மாரீஸ்வரி. சம்பவத்திற்கு 6 வருடங்களுக்கு முன்பு மாரீஸ்வரிக்கு திருமணம் ஆனது என்றால் சரிதான். சம்பவயிடம் ஒரு முடுக்கு பகுதி என்றால் அது சந்தாகும். எதிரி எந்த திசையை நோக்கி ஓடினார் என்றால் தெற்கு பார்த்து ஓடினார். சம்பவயிடத்தின் அருகே வசந்தன் என்பவரின் வீடு இல்லை என்றால் சரிதான். எதிரியும், அ.சா.1, அ.சா.2 ம் என்றைய தினம் ஒப்பந்தம் போட்டார்கள் என்றால் வசந்தா எதிரியிடமிருந்து பணம் வாங்கியுள்ளதாக கேள்விபட்டேன். ஆனால், ஒப்பந்தம் என்றைய தினம் போட்டார்கள் என்று எனக்கு தெரியாது. நான் முதல்விசாரணையில் கூறியுள்ளவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. திருமலையாண்டவர் கோவில் தெருவில் கடைகள் இல்லை என்றால் சரியல்ல. சிறிது தூரத்தில் உள்ளது. சம்பவம் 08.30 மணிக்கு நடந்தது என்றால் 08.30, 08.40 மணியிருக்கும்.

எதிரி அவதூறான வார்த்தைகள் பேசவில்லை என்றால் சரியல்ல. அ.சா.2 வசந்தா என்பவரை தாக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல. மாரிச்செல்வம், கவின் ஆகியோர்கள் தண்ணீர் தெளித்து வசந்தாவை எழுப்பினார்கள் என்றால் சரிதான். வசந்தா எழும்பினாரா? என்றால் எழும்பினார், சிறிது

மயக்கத்தில் இருந்தார். மாரிச்செல்வத்தின் மாமா பால்ராஜ் என்பவரை எனக்கு தெரியுமா? என்றால் அறிமுகம் இல்லை, கேள்விபட்டுள்ளேன். பால்ராஜ் என்பவர் மீது போலீஸ் ஜீப்பை உடைத்தது சம்பந்தமாக ஒரு வழக்கு சுண்டை காவல்நிலையத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கில் எதிரி சாட்சியம் அளித்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அந்த முன்பகை காரணமாக அ.சா.1 பொய் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மருத்துவமனைக்கு யார் வசந்தாவை அழைத்து சென்றார்கள் என்றால் நான் செல்லவில்லை, ஏற்றி விட்டேன். அ.சா.1, 15 வருடங்களாக எனக்கு நண்பர் என்பதினால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளித்தேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.03 18:56:49 +0530